உ

சிவமயம்

# தேவரையாளி இந்துக் கல்லூரி

## கரவெட்டி

(மெய்ப்பொருள் காண்பதறிவு)

## பரிசுத்தினம் - 2009

**அதிபர் அறிக்கை**

இடம் : க.மு.சின்னத்தம்பி கலையரங்கு
காலம் :- 2009.10.31 சனிக்கிழமை மு.ப.10.00மணி
தலைவர் :- திரு.மா.நவநீதமணி (அதிபர்)

முதன்மை விருந்தினர்
சமூக சேவைகள், மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்
**உயர்திரு.கௌரவ.கே.என்.டக்ளஸ் தேவானந்தா** அவர்கள்

## Prize Day - 2009
## Principal's Report

Chief Guest
*Ministry of Social Service and Social Welfare*
***Honorable K.N.Dauglas Devananda***

*Thevraiyali Hindu College*
*Karaveddy*
**31.10.2009.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர் வரவேற்பு
- மங்கள விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- தமிழ்த்தாய் வாழ்த்து
- வரவேற்புரை :- திருமதி.ற.குலவரதராசா (பகுதித்தலைவர்)
- அறிக்கை :- திரு.மா.நவநீதமணி – அதிபர்
- தமிழ்மொழிப் பேச்சு :- செல்வி.யோ.அஞ்சலா (தரம் 12)
- வரவேற்புக் கவிதை
- ஆங்கிலமொழிப் பேச்சு :- செல்வி.கி.சங்கீதா (தரம் 9)
- பரிசுத்தின உரை :- முதன்மை விருந்தினர்

கௌரவ சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சர்

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா** அவர்கள்

- பரிசில் வழங்கலை நெறிப்படுத்தல் :-

திருமதி.யோ.பாலகுமார்(பகுதித்தலைவர்)

- மாணவர் நிகழ்வுகள்
- நன்றியுரை :- திரு.வ.திருக்குமாரன்

(செயலாளர், ஆசிரியர் கழகம்)

- கல்லூரிக் கீதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகுட வாசகம் *(MOTTO)*

**மெய்ப்பொருள் காண்பது அறிவு**

## தொலை நோக்கு *(Vision)*

**சமூகத்திற்குப் பொருத்தப்பாடுடைய நற்பிரஜைகளை உருவாக்கக் கூடிய பாடசாலையாக மிளிர்தல்**

## குறிக்கோள் *(Mission)*

ஆசிரியர்களிடையே வாண்மைத்துவத்தை விருத்தி செய்து ஆசிரியர்களிடையேயும் மாணவர்களிடையேயும் சிறந்த தலைமைத்துவத்தை வளர்த்து பாடசாலை சமூகத்தவரிடையே பாடசாலை குறித்த நல்ல எண்ணக்கருவை ஏற்படுத்தி சிறந்த பெறுபேறுகளையும் விழுமியப் பண்புகளையும் வெளிக்காட்டும் வகையில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைத்து மற்றையோரும் ஒரு முன்மாதிரியாய்க் கொள்ளும் வகையில் எமது பாடசாலையை உருவாக்கல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ தேவரையாளி இந்துக்கல்லூரி கரவெட்டி பரிசில் தின அதிபர் அறிக்கை - 2009

இன்றைய எமது கல்லூரிப் பரிசில் தின நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும். மதிப்புக்குரிய கௌரவ சமூக சேவைகள் அமைச்சர் உயர் திரு டக்ளஸ்தேவானந்தா அவர்களே, அவர் தம் அமைப்பைச் சேர்ந்தவர்களே, எமது கல்வித்திணைக்களத்தைச் சேர்ந்த பணிப்பாளர்களே,அவையிலே அமர்ந்துள்ள பெரியோர்களே, அயற்பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, பெற்றோர்களே, பழைய மாணவர்களே, நலன்விரும்பிகளே, மாணவச்செல்வங்களே, அனைவர்க்கும் வணக்கம்.

நீண்ட வரலாற்றுத்தொன்மையும் சமூகப்பாரம்பரியச் சிறப்பும் மிக்க எமது கல்லூரியின் புதிய அதிபராக பதவியேற்று எனது தலைமையில் நடைபெறும் முதலாவது பரிசளிப்பு விழா பற்றிய அறிக்கையினை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். பல்வேறுபட்ட மக்களுக்கான கடமைப்பொறுப்புகளுக்கு மத்தியிலும் எமது மக்களோடு நின்று மக்களுக்காக பணியாற்றிவரும் பல்வேறுபட்ட நலத்திட்டங்களை முன்னெடுத்துவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்தறை அமைச்சருமான மதிப்புமிகு டக்ளஸ் தேவானந்தா அவர்கள் எமது அன்பான அழைப்பை ஏற்று இன்றைய எமது கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்வது எமக்கு எமது சமூகத்திற்கு மட்டற்ற பெருமையையும் மகிழ்ச்சியையும் தருகிறது. இவ் வேளையில் அவரது வருகைக்காக அவருக்கு நாம் எமது நன்றிகளை செலுத்தி மகிழ்கின்றோம்.

இந்தக் கல்லூரியிலே க.பொ.த உயர்தரம் வரை கல்வி கற்று இங்கிருந்து பல்கலைக்கழகம் சென்று மீண்டும் என்னை வையத்துள் வல்லவனாய் வளர்ந்துவிட்ட இந்தக் கல்லூரியிலேயே அதிபராகக் கடமையாற்ற கிடைத்துள்ள வாய்ப்பைப் பெரும் பேறாகக் கருதுகிறேன். வளர்ச்சிப்பாதையில் சென்று கொண்டிருக்கும் எமது கல்லூரியை எனது காலத்தில் பல்துறையிலும் மேலும் வளர்ச்சியடையச் செய்வேன் என்று உறுதி கூறுகின்ற இவ்வேளையிலே என்னை இந்நிலைக்கு ஆளாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்ட எனது மதிப்புக்குரிய ஆசிரியத் தெய்வங்களையும் வழிகாட்டிகளையும் ஒருமுறை மனதில் மதிப்போடு எண்ணிப்பார்க்கின்றேன்.

எமது யா/ தேவரையாளி இந்துக்கல்லூரியானது தனக்கென தனித்துவமானதொரு சமூக வரலாற்றுப் பின்னணியை கொண்ட வித்தியாசமானதொரு பாடசாலையாக வடமராட்சி வலயத்திலேயே மிளிர்வது சிறப்புக்குரியதாகும் எமது தேவரையாளி சமூகத்தின் கல்வித் தேவைகளை நிறைவேற்றி இச்சமூகத்தின் பண்பாடு, ஒழுக்கம் , அறிவு போன்றவற்றின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றி வருவதுடன் எமது சமூகத்தின் மதிப்பு நிலையை உயர்த்துவதிலும் பங்களிப்புச் செய்து வருகின்றது. இன்று எமது கல்லூரியில் கற்ற மாணவர்கள் பல்வேறு இடங்களிலும் அரச உயர்பதவி வகிக்கின்ற பலர் இருக்கின்றார்கள் என்றால் அந்தப பெருமையை எமக்கு பெற்றுத்தந்ததில் எமது இந்தக்கல்லூரிக்கு முக்கிய பங்கு உண்டு. இதனை நாம் இன்று இலங்கையின் பல பாகங்களிலும் உயர்பதவி வகிக்கும் எமது பழைய மாணவர்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

இவ்வகையில் ஒரு சைவத்தமிழ்பாரம்பரிய சிறப்பு மிக்க இக்கல்லூரித்தாய் அதன் நிறுவுநரின் சிறப்பான பணிகளாலும் காலந்தோறும் கடமையாற்றிய புகழ்பூத்த அதிபர்களது அர்ப்பணிப்பு மிக்க சேவையாலும், அவர்களோடு இணைந்து பணியாற்றிய ஆசிரியர்கள், ஊழியர்களது அர்ப்பணிப்பு மிகு சேவையாலும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்சங்கம் போன்றவர்களது பங்களிப்புக்களுடனும் உன்னத வளர்ச்சி நிலையைக் கண்டு இன்று நூற்றாண்டை நோக்கி நெருங்கிக் கொண்டிருக்கும் இக்கல்லூரியின் தற்போதைய அதிபராக கடமையேற்றுள்ள எனது தலைமையில் இன்று பரிசளிப்பு விழாக்காணும் இவ்வேளையில் இவற்றை மீட்டுப்பார்த்து இந்நன்னாளிலேயே அவர்கள் அனைவரையும் நன்றியோடு நினைவு கூறுகின்றேன்.

## கட்டட வளம்

புதிய கல்வி உலகமாற்றத்திற்கு ஏற்ற வகையில் நீண்டகாலமாக புதிய வகுப்பறைக் கட்டடங்களோ, நூலகக்கட்டடங்களோ, முறையான விஞ்ஞானன ஆய்வு கூடம், செயற்பாட்டறைகள் எவையும் எமக்கு கிடைக்கப்பெறவில்லை. ஆயினும் இருக்கின்ற குறைந்த பட்ச வளங்களைக்கொண்டு இதுவரைகாலமும் எமது கல்லூரி ஓரளவு சிறப்பான வெளியீடுகளை மேற்கொண்டு வந்துள்ளது. ஆயினும் நவீன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திற்கு ஏற்றவகையில் கற்றல் கற்பித்தலைக் கொண்டு செல்வதில் இடர்பாடுகள் காணப்படுகின்றன. மாணவர் தொகைக்கேற்ப கட்டடவளம் போதியதாக இல்லை புதியகட்டடங்களை அமைப்பதற்கான இடவசதியின்மை பெரிய குறைபாடாகும். பாடசாலைக்கு அண்மையில் உள்ள நிலங்களை அதன் நலன் கருதி பாடசாலைக்கு நலன் விரும்பிகள் வழங்கினால் எதிர்காலத்தில் பாடசாலை பௌதீகவள விருத்தி ஏற்பட வாய்ப்புண்டு இல்லையேல் இருக்கும் கட்டடங்களை இடித்து அகற்றி புதிய கட்டடங்கள் அமைக்கும் நிலையே காணப்படுகிறது. ஆயினும் நான் அதிபராகப் பொறுப்பேற்ற குறுகிய காலத்தினுள் இது விடயத்தினுள் கூடிய அக்கறை செலுத்தி புதிய அலுவலக புனரமைப்பு, ஆரம்பபிரிவு கட்டடம், கணனி அறை நவீனமயப்படுத்தல் போன்ற பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருப்பதுடன் பாடசாலையின் பௌதீக வள விருத்தியில் அதிக அக்கறையுடன் உழைத்து வருகின்றேன்.

குறிப்பாக நீண்ட காலமாக பூர்த்தியாக்கப்படாதிருந்த 50 x 25 மாடிக்கட்டடம் கல்லூரி நிர்வாகம் மேற்கொண்ட தீவிர முயற்சியின் பயனாக வடக்கின்வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் தற்போது நடைபெற்று வருகின்றமை. மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இதன் முதற்கட்ட வேலைக்காக கௌரவ அமைச்சர் அவர்கள் புனர்வாழ்வு அமைச்சராய் இருந்த காலப்பகுதியில் RRAN அமைப்பு மூலம் நிதியுதவியை வழங்கியிருந்தார். தற்போதய வேலைக்கு கூட சமூக சேவைஅமைச்சர் அவர்களின் உதவி பேருதவியாய் அமைந்தது. இந்த வகையில் கௌரவ சமூகசேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் அவரது அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கும் எமது கல்வித்திணைக்கள அதிகாரிகளுக்கும் எமது நன்றிகள். ஆயினும் தற்போது கிடைத்துள்ள நிதியைக்கொண்டு முழுமையான முறையில் இவ்வேலைத்திட்டத்தை நிறைவேற்றமுடியாதுள்ளது என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிட்டுக்கொள்ள விரும்புகின்றேன். அத்தோடு யுனிசெவ் நிறுவனத்தினரால் குழாய் நீர் புனரமைப்பு நிதியும் இவ்வாண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். ஆயினும் இன்னமும் கட்டடரீதியாகவும் ஏனைய பௌதீக வள ரீதியாகவும் பல தேவைகளை நாம் எதிர்கொண்ட வண்ணமே உள்ளோம். எதிர்காலத்தில் இதற்கான உதவிகள் கிடைக்கும் பட்சத்தில் இப்பிரச்சனைகளைத்தீர்த்து எமது மாணவர்களுக்கு மேலும் முழுநிறைவான தரமான கல்வியை வழங்கி தரமான சமுதாயத்தை படைக்க முடியும் என நம்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் வளம்

எமது பாடசாலை கரவெட்டிக்கோட்டத்தின் ஒரு 1 C பாடசாலையாக அமைந்துள்ளது. இங்கு தரம் 1 முதல் க.பொ.த உயர்தர கலைப்பிரிவு வரை வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இவ்வகையில் எமது கல்லூரியின் மாணவ வளம் பின்வருமாறு அமைந்துள்ளது.

**2008ம் ஆண்டின் மொத்தமாணவர் தொகை – 720**

| | | |
|---|---|---|
| தரம் | 1 - 5 | - 205 |
| தரம் | 6 - 11 | - 427 |
| தரம் | 12 - 13 | - 88 |
| மொத்தம் | | - 720 |

**ஆசிரியர் வளம் (அதிபர்உட்பட)**

**நிரந்தர ஆசிரியர்**

கல்வி முதுமாணி - 01

**பட்டதாரிகள்**

விஞ்ஞானப்பட்டதாரி- 01
கலைப்பட்டதாரி - 08
வணிகப்பட்டதாரி - 01
நுண்கலைமாணி - 02

**பயிற்றப்பட்டவர்கள்**

ஆங்கிலம் - 02
கணிதம் - 04
விஞ்ஞானம் - 01
தொழில்நுட்பம் - 01
தமிழ் - 01
ஆரம்பக்கல்வி - 06
கல்வியியற்கல்லூரி - 02

**தற்காலிக இணைப்புப்பெற்ற ஆசிரியர்**

வணிகப்பட்டதாரி - 01
கலைப்பட்டதாரி - 04
நுண்கலை - 01
ஆரம்பக்கல்வி - 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விசாரா ஆளணியினர்

கல்லூரியின் கல்விச்செயற்பாடுகளும் இணைப்பாடவிதான செயற்பாடுகளும் ஒழுங்காக நடைபெறுவதற்கு இவர்களின் பங்களிப்பு அளப்பரியது அந்த வகையில் ஆய்வுகூட உதவியாளராக திருமதி சா.குகேந்திரன், நூலகஉதவியாளராக புதிதாக நியமனம் பெற்ற திரு ஜெ.சுபாகு, பாடசாலைப் பணியாளராக திரு பு. திவாகரன் ஆகியோரும் பணியாற்றி வருகின்றனர்.

## பாடசாலையில் இயங்கும் குழுக்களும் மன்றங்களும், சங்கங்களும் அவற்றின் செயற்பாடுகளும்.

எமது கல்லூரியின் கல்விசார் நடவடிக்கைகளையும் இணைப்பாடவிதான செயற்பாடுகளையும் பாடசாலையின் அபிவிருத்தியையும் நோக்காகக் கொண்டு பல்வேறு குழுக்கள் என்ற அடிப்படையில் முகாமைத்துவக் குழு இயங்கி வருகின்றது. இதில்

**பாடசாலை முகாமைத்துவக் குழு (S.M.C)**

| | | |
|---|---|---|
| திரு மா.நவநீதமணி | - | அதிபர் |
| திருமதி ற.குலவரதராஜா | - | பகுதித்தலைவர் |
| திருமதி யோ.பாலகுமார் | - | பகுதித்தலைவர் |
| திரு செ.அட்ஜெயலிங்கம் | - | இணைப்பாளர் ஆரம்பப்பிரிவு |
| திருமதி கீ.கமலேந்திரன் | - | ஆசிரியர் |
| திருமதி பி.செல்வராசா | - | ஆசிரியர் |
| திரு வே.நந்தகுமார் | - | ஆசிரியர் |
| திரு பா.உதயராஜன் | - | ஆசிரியர் |
| திருமதி இ.யோகரட்ணம் | - | ஆசிரியர் |
| திருமதி உ.ஞானசீலன் | - | ஆசிரியர் |

**பாடசாலை ஒழுக்காற்றுக் குழு**

| | | |
|---|---|---|
| திரு.மா.நவநீதமணி | - | அதிபர் |
| திருமதி.ற.குலவரதராஜா | - | பகுதித்தலைவர் |
| திருமதி.யோ.பாலகுமார் | - | பகுதித்தலைவர் |
| திரு.செ.அட்ஜெயலிங்கம் | - | ஆசிரியர் |
| திரு.கி.பாக்கியநாதன் | - | ஆசிரியர் |
| திருமதி.சி திரவியநாயகம் | - | ஆசிரியர் |

ஆகியோரைக்கொண்டு இயங்கிவரும் இக்குழுவினர் மாணவர்களின் வரவொழுக்கம் நடத்தைகள், பண்பாடு, பழக்கவழக்கமேம்பாடு என்பவற்றில் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத்திக் குழு

| | | |
|---|---|---|
| திரு. மா.நவநீதமணி | - | அதிபர் |
| திருமதி.ற.குலவரதராஜா | - | பகுதித்தலைவர் |
| திருமதி.யோ.பாலகுமார் | - | பகுதித்தலைவர் |
| திரு.க.முருகானந்ததாஸ் | - | ஆசிரியர் |
| திரு.க.சேதுலிங்கம் | - | ஆசிரியர் |
| திரு.பி.கிருஸ்ணானந்தன் | - | பெற்றோர் |
| திரு.செ.இன்பராஜன் | - | பெற்றோர் |
| திரு.செ.கணேசன் | - | பெற்றோர் |
| திரு.ப.சிவகுமார் | - | பெற்றோர் |
| திரு ந.சுவேந்திரா | - | பழைய மாணவன் |
| திரு த.தேவராஜன் | - | பழைய மாணவன் |
| திரு K.M.ஈஸ்வரதேவன் | - | வலயபிரதிநிதி |

ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு இயங்கி வருகின்றது. பாடசாலையின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களில் இக்குழு கூடிய கவனம் செலுத்திச் செயற்பட்டு வருகின்றது.

## பாடசாலையின் ஆசிரியர் கழகம்

எமது பாடசாலை ஆசிரியர்களின் நலன் சார்ந்த விடயங்களை மேம்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள கல்லூரியின் ஆசிரியர் கழகமானது ஆசிரியர்களது பிறந்த நாளை சிறப்பித்து வருவதுடன் எமது ஆசிரியர்களின் இன்ப துன்ப நிகழ்வுகளிலும் பங்கெடுத்து வருகின்றது. இவ்வகையில் முன்னாள் அதிபர் திரு ம.குட்டித்தம்பி மற்றும் எமது கல்லூரியின் பிரதி அதிபர் திரு மு.வன்னியசிங்கம் அவர்களின் பிரியாவிடையின் போது ஆசிரியர் கழகம், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழையமாணவர் சங்கம் என்பவற்றின் நிதிப்பங்களிப்பினூடாக அவர்களுக்குரிய பிரியாவிடை நிகழ்வினை சிறப்பாக நடாத்தியமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வகையில் தற்போதைய ஆசிரியர் கழகத்தின் தலைவராக ஆசிரியர் திரு க.சேதுலிங்கம் அவர்களும், செயலாளராக ஆசிரியர் திரு வ.திருக்குமாரன் அவர்களும், பொருளாளராக ஆசிரியர் திருமதி பொ.இராஜேஸ்வரன் அவர்களும் மிகச் சிறந்த முறையில் கடமையாற்றுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

அதிபரைத் தலைவராகவும், திரு ந.ஆதவன் அவர்களை செயலாளராகவும், திரு.செ.அட்ஜெயலிங்கம் அவர்களைப் பொருளாளராகவும் கொண்ட இச்சங்கம் கல்லூரியின் முன்னேற்றம் அபிவிருத்தி முதலியவற்றில் பேருதவி புரிந்து வருகின்றது. எனினும் பாடசாலையின் செயற்பாடுகளுக்கு இச்சங்கத்திடம் போதியளவு நிதிவசதி இல்லாமை கவலைக்குரியதாகும்.

## பழையமாணவர் சங்கம்

நீண்டகாலமாக புனரமைக்கப்படாதிருந்த பழையமாணவர் சங்கம் இவ்வாண்டு அதிபர், ஆசிரியரின் முயற்சியின் மூலம் புனரமைக்கப்பட்டது. அதன்மூலம் செயற்திறன் மிக்க ஒரு செயற்குழு தெரிவுசெய்யப்பட்டது. இதில்

| | | |
|---|---|---|
| தலைவராக | - | இரத்தினம் ஜெகானந்தன் அவர்களும் |
| செயலாளராக | - | தேவராசா து்யந்தன் அவர்களும் |
| பொருளாளராக | - | செல்லத்தம்பி சுரேந்திரா அவர்களும் |

தெரிவு செய்யப்பட்டனர் இப்பழையமாணவர் சங்கத்தில் புதிய உத்வேகத்துடன் பல பழையமாணவர்கள் அங்கத்தவர்களாக இணைந்து கொள்கிறார்கள். எல்லோரும் எதிர்காலத்தில் இணைந்துகொள்ளவேண்டும் என்பதே எமது விருப்பமாகும். இப் பழையமாணவர் சங்கத்திற்கு நிதி இல்லாத போது இச்சங்கத்தினர் பாடசாலை வளர்ச்சி கருதி **அந்திராகம்** எனும் பிரமாண்டமான கலைநிகழ்ச்சியை நடத்தி அதனூடாக ரூபா இரண்டு லட்சத்தினை இலாபமாக அடைந்து அதனை பாடசாலை வளர்ச்சிக்காக வங்கியில் வைப்பில் இட்டுள்ளனர். இந்தநிகழ்ச்சியினை நெறிப்படுத்திய பழையமாணவர்களுக்கும, ஆசிரியர்களுக்கும் இதற்கு உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி கூறுவதுடன் இனிவரும் காலங்களிலும் இதுபோன்ற உதவிகளை வழங்கி பாடசாலை மேம்பாட்டுக்கு பங்களிப்புச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். இதேவேளை எமது கல்லூரியின் பழையமாணவர்சங்க தென்னிலங்கைக் கிளையும் அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பான புனரமைப்புக் கூட்டம் அண்மையில் அதிபர் தலைமையில் கொழும்பில் நடைபெற்றது. இதேபோல வெகு விரைவில் வெளிநாட்டுக்கிளைகளை நிறுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்றங்கள்

எமது கல்லூரி மாணவர்களின் சமய வழிபாட்டு முறைகளை நெறிப்படுத்தி அவர்களிடம் சமய நம்பிக்கையினையும் சமயப் பண்பாட்டு விழுமியங்களையும் மேம்படுத்தும் நோக்கிலும் சமய விரதங்கள், வெள்ளிப் பிரார்த்தனை, சமய விழாக்கள், என்பவற்றை நடாத்துவதனை நோக்காக் கொண்டும் இந்துமாமன்றம், கிறிஸ்தவமன்றம் என்பன இயங்கி வருகின்றன. இந்து மாமன்றமானது கல்லூரி சமய ஆசிரியையான திருமதி ச.சுரேந்திரன் அவர்களைத் தலைவராகவும், ஆசிரியர் திரு வ.திருக்குமாரன் செயலாளராகவும் ஆசிரியர் திரு பா.உதயராஜன் பொருளாளராகவும் கொண்டு இயங்கிவரும் அதேவேளை மாணநிலையில் ரொ.பிரதாப் தலைவராகவும்,லி.ஜெசித்தா செலாளராகவும்,தி.நிவேதினி பொருளாளராகவும் செயற்பட்டு வருகின்றனர். இவ் இந்துமாமன்றமானது சைவநெறித் தேர்வுக்கு உதவும் அதே வேளைஒவ்வொரு வெள்ளிக்கிழமைப் பூசைகளை மாணவர்களைக் கொண்டு சிறப்பான முறையில் நிறைவேற்றி வருவதுடன் வருடந்தோறும் நவராத்திரி விழாவையும் ஏடு தொடக்குதலையும் சிறப்பாக செய்து வருகின்றது. இதேபோல கிறிஸ்தவ மாணவர் மன்றப் பொறுப்பாசிரியராக திரு பூ.அ.பூபாலசிங்கம் ஆசிரியர் அவர்கள் செயற்பட்டு வருகின்றார்.

இதேபோல எமது கல்லூரியின் மாணவர் மன்றம் என்பதும் சிறப்பான முறையில் செயற்பட்டு மாணவர்களின் கலை, அறிவுத்திறன் வெளிப்பாட்டிற்கும் இணைபாட விதான செயற்பாட்டிற்கும் ஊக்கமளித்து வருகின்றது. ஒன்றுவிட்ட ஒரு திங்கட்கிழமை காலை நடைபெற்று வரும் இம்மன்றச் செயற்பாடுகள் இனிவரும் காலத்தில் புதன் கிழமை பிற்பகல் வேளைகளில் நடைபெற உள்ளன. இம்மன்றத்தின் பொறுப்பாசிரியராக எமது கல்லூரியில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றும் தமிழ் ஆசிரியர் திரு வே.நந்தகுமார் அவர்கள் செயற்பட்டு வருவதுடன் மாணவர் நிலையில் மன்றத்தலைவராக தரம் 13 ஐச் சேர்ந்த செல்வி யோ.அபினயா அவர்களும் செயலாளராக தரம் 13 ஐச் சேர்ந்த செல்வன் சீ.சுதர்சன் அவர்களும் பொருளாளராக தரம் 13 ஐச்சேர்ந்த இ.றிஸ்வினா அவர்களும் செயற்பட்டு வருகின்றனர்.

. பாடசாலையில் சுகாதாரக் கழக பொறுப்பாசிரியராகவும், விளையாட்டுத்துறை, வீதிக் கண்காணிப்பு பொறுப்பாசிரியராகவும் திரு கி.பாக்கியநாதன் ஆசிரியர் அவர்கள் செயற்பட்டு வருகின்றார். இதேவேளை எனது முயற்சியின் காரணமாக நீண்டகால இடைவெளிக்குப்பின் எமது கல்லூரியில் குருளைச் சாரணிய, சாரணிய,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஆகிய சேவை அமைப்புக்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளமையும் இவ்விடத்தில் குறிப்பிட வேண்டியதாகும். இவ்வகையில் குருளைச் சாரணிய பொறுப்பாசிரியர்களாக திருமதி பொ.இராஜேஸ்வரன் ஆசிரியர் அவர்களும், திருமதி ம.அனுராகாந்தன் ஆசிரியர் அவர்களும் செயற்பட்டு வருகின்றனர். இதேவேளை சாரணிய பொறுப்பாசிரியர்களாக திரு இ.சந்திரஹாசன் ஆசிரியர் அவர்களும், திரு த.ரஜிகரன் ஆசிரியர் அவர்களும் பணியாற்றி வருகின்றனர். சென்ஜோன்ஸ் அம்புலன்சின் பொறுப்பாசிரியராக திரு க.சேதுலிங்கம் ஆசிரியர் அவர்கள் கடமையாற்றுகின்றார். இந்த வகையில் எமது கல்லூரியில் வினைத் திறனுடன் செயற்பட்டுவரும் இச்சங்கங்களும், மன்றங்களும் கல்லூரி மாணவரின் அறிவு, திறன் மனப்பாங்கை மேம்படுத்துவதிலும் தேர்ச்சிமட்டம்சார் தரமான கல்வியை மாணவர்கள் அடைவதற்கும் வழிகாட்டியாய் அமைந்துள்ளமை சிறப்புக்குரியதாகும்.

## பாடசாலைக்குக் கிடைத்து வரும் நிறுவனம், அமைப்பு சார் உதவிகள்

## Y.M.C.A

2007 ம் ஆண்டு முதல் இன்றுவரை இந்நிறுவனமானது எமது பாடசாலையை இனங்கண்டு பல்வேறுபட்ட உதவிகளை தொடர்ச்சியாக செய்து வருகிறது. நூலக விருத்தி, இசைக்கருவிகளின் அன்பளிப்பு, உபகரணக்கொள்வனது எனப் பல வகையில் உதவியுள்ள இவ்வமைப்பு எதிர் காலத்திலும் எமது கல்லூரியின் ஏனைய பல தேவைகளுக்கும் உதவ முன்வந்துள்ளதை நன்றியோடு குறிப்பிட்டு அந்நிறுவனத்திற்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

## நிறுவன உதவிகள்

எமது கல்லூரி மாணவர்களின் உடல் ஆரோக்கியத்திற்கான மதிய உணவுத்திட்டத்தை உலக உணவுத்திட்டம் என்ற அமைப்பு சிறப்பான முறையில் நிறைவேற்றி வருகின்றது.அத்தோடு எமது கல்லூரிக்கு சிறப்பான ஒரு சமயலறைக் கட்டடத்தையும் அமைத்துத் தந்துள்ளது. இதேபோல யுனிசெவ் அமைப்பு எமது கல்லூரியின் குழாய் நீர் வடிகாலமைப்பு பணிகளை சீர்செய்ய பங்களிப்பு செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல ZOA என்ற அமைப்பு எமது கல்லூரிக்கு குடிநீர்க் கிணறுகளை புனரமைப்புச் செய்து தந்துள்ளது. இதேபோல வலயக்கல்விப் பணிமனையை சேர்ந்த மதிப்புக்குரிய கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், ஏனைய அதிகாரிகள், பாடசாலைப் புனரமைப்புக்குரிய நிதி ஒதுக்கீடுகளுக்கு அங்கீகாரம் வழங்கியும், வாய்ப்புக்களை வழங்கியும், உதவிகளை வழங்கியும் வருகின்றனர். இவ்வுதவிகளுக்காக இவர்கள் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

## ஓய்வும் பிரியாவிடையும்

எமது கல்லூரியில் பதின்நான்கு வருடங்கள் சிறப்பான முறையில் அதிபராகக் கடமையாற்றிய எமது கல்லூரி வரலாற்றில் திருப்புமுனையை ஏற்படுத்திய அதிபர் என்ற பெருமைக்குரிய திரு ம.குட்டித்தம்பி அவர்கள் 09.03.2009 அன்று ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். இந்தக் கல்லூரி மிகவும் அடைவு குறைந்த நிலையில் இருந்த வேளை இக் கல்லூரியின் அதிபராக கடமையைப் பொறுப்பேற்ற திரு குட்டித்தம்பி அதிபர் அவர்கள் தனது ஆளுமைமிக்க சிறப்பான செயற்பாடுகள் காரணமாக பாடசாலையின் மாணவ ஒழுக்கம், கல்வி அடைவுமட்டம் என்பவற்றை மேம்படுத்தியதுடன் தனது காலத்தில் எமது கல்லூரியில் இருந்த கா.பொ.த.உயர் தரத்தில் சிறந்த பெறுபேறுகளை ஏற்படுத்திஅதிகளவான மாணவர்களை பல்கலைக் கழகத்திற்கு அனுப்பிய பெருமையும் இவரையே சாரும் இவ்வகையில் கல்லூரியின் தரத்தைஉயர வைத்ததில் அவருக்கு முக்கிய பங்குண்டு. அவர் கல்லூரியை விட்டு ஓய்வு பெற்றுச் சென்றாலும் எமக்காக ஆற்றிய பணிகளை நாம் என்றும் மறவாது நன்றியோடு நினைவு கூருகின்றோம்.

இதேபோல எமது கல்லூரியில் 29 வருடங்கள் விஞ்ஞான ஆசிரியராகவும் சிலகாலங்கள் பகுதித்தலைவராகவும். உபஅதிபராகவும் கடமையாற்றிய திரு மு.வன்னியசிங்கம் ஆசிரியர் அவர்கள் கடந்த 08.08.2009 ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். இவரும் எமது கல்லூரியின் வளர்ச்சிக்கும், எமது சமூகத்தின் விஞ்ஞான அறிவு வளர்ச்சிக்கும் அரும் பணிகள் ஆற்றியுள்ளார். எம் கல்லூரித் தாய்க்காக தன் வாழ்வின் பெரும் பகுதியை அர்ப்பணித்து சேவையாற்றியமைக்காக இவருக்கும் எம் நன்றிகள். இவ்விருவருக்குமான பிரியாவிடை நிகழ்வுகள் எமது கல்லூரிச் சமூகத்தினராலும், ஏனையவர்களாலும் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டமையும் இவர்களது சேவைக்கு மதிப்பளித்து வாழ்த்துப்பாக்கள், நினைவுப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப் பரிசில் நிதியங்கள்

**(1) பரஞ்சோதி பாஸ்கரன் புலமைப் பரிசில் நிதியம்**

பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர்களுள் மிகச்சிறந்த பெறுபேறு பெறுபவருக்கு திருவாளர் ந.பாஸ்கரன் (நெல்லியடி) அவர்களால் திருமதி பரஞ்சோதி பாஸ்கரன் ஞாபகார்த்தமாக வழங்கப்படுகிறது. இத்துடன் இவர் தனது புலமைப் பரிசில் நிதிக்கு புறம்பாக வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மாணவர்களுக்கான உதவு தொகையினை வழங்கிவருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**(2) தங்கராசா ரமணன் புலமைப்பரிசில் நிதியம்**

க.பொ.த.சாதாரணதரத்தில் மிகச்சிறந்த பெறுபேறுகள் பெறும் முதல் ஐந்து மாணவர்களுக்கு இப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. இதனை வதிரியூர் ஓய்வுபெற்ற உதவி அதிபர் திரு சு.தங்கராசா அவர்கள் தனது மகன் நினைவாக வழங்கி வருகிறார்.

**(3) திரு க.வேலுப்பிள்ளைஞாபகார்த்த புலமைப்பரிசில் நிதியம்**

அல்வாயூர் திரு வே.சிவராஜலிங்கம் பிரதேசசபைச் செயலாளர் சாவகச்சேரி அவர்கள் தனது தந்தையார் ஞாபகார்த்தமாகஇப்புலமைப் பரிசினை வழங்கி வருகிறார்

**(4) திரு குட்டித்தம்பி தம்பிராசா (எழுதுவினைஞர்) ஞாபகார்த்த புலமைப்பரிசில்**

வதிரியூர் திரு த.தேவானந் (சிலிங்கோ இன்சூரன்ஸ்) அவர்கள் தனது தந்தையார் ஞாபகார்த்தமாக இப்புலமைப் பரிசிலை வழங்கி வருகிறார்.

**(5) திரு ஆழ்வாப்பிள்ளை பிள்ளையினார் ஞாபகார்த்த புலமைப்பரிசில்**

கொற்றையூர் திரு பி.கிருஷ்ணானந்தன்-மக்கள் வங்கி முகாமையாளர் அவர்கள் க.பொ.த சாதாரண தரத்தில் மிகச் சிறந்த பெறுபேறு பெறும் மாணவர்களுக்கு தனது தந்தையார் ஞாபகார்த்தமாக வழங்கி வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(6) திரு தம்பையா தணிகாசலம் ஞாபகார்த்த புலமைப் பரிசில்**

அல்வாயைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்டதிரு ந.திலீபன் அவர்களால் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்காக அவரது பேரனார் ஞாபகார்த்தமாக இது வழங்கப்பட்டு வருகிறது.

**இவ்வாண்டு முதல் புதிதாக வழங்கப்படவுள்ள புலமைப்பரிசில்கள், நிதியங்கள், அன்பளிப்புக்கள்**

**ஜே.எஸ் கிறிஸ்ததாஸ் ஞாபகார்த்த நிதியம்**

1) எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் அமரர் ஜே.எஸ்.கிறிஸ்ததாஸ் அவர்களுடைய ஞாபகார்த்த புலமைப்பரிசிலை திருமதி நேசமணி கிறிஸ்ததாஸ் அவர்கள் வழங்கி உள்ளார

**பரஞ்சோதி ஞாபகார்த்த நிதியம்**

2) அமரர் வ.பரஞ்சோதி அவர்கள் ஞாபகார்த்த புலமைப்பரிசிலை அவரது ஞாபகார்த்தமாக திரு.திருமதி.ஜோதீஸ்வரன் வாசுகி அவர்கள் வழங்கி உள்ளனர்

**சூரன் சிவபாக்கிம் ஞாபகார்த்த நிதியம்**

3) முன்னாள் ஆசிரியை செல்வி சூரன் சிவபாக்கியம் ஞாபகார்த்த புலமைப்பரிசிலை அவரது குடும்பத்தினர் வழங்கி உள்ளனர்.

**சூரன் ஏகாம்பரம் ஞாபகார்த்த நிதியம்**

4) முன்னாள் ஆசிரியர் சூரன் ஏகாம்பரம் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் புலமைப் பரிசினை அவரது குடும்பத்தினர் வழங்கி உள்ளனர்.

**விஜயரட்ணம் ஞாபகார்த்த நிதியம்**

5) முன்னாள் அதிபர் இ.விஜயரட்ணம் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் புலமைப்பரிசினை அவரது மகன் வி.மதனராஜன் வழங்கி உள்ளார்

**திரவியம் ஞாபகார்த்த நிதியம்**

6) முன்னாள் பிரதிஅதிபர். அமரர் திரு.சி.திரவியம் அவர்கள் ஞாபகார்த்தப் புலமைப் பரிசினை அவரது குடும்பத்தினர் வழங்கி உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்பையா ஞாபகார்த்த நிதியம்

7) முன்னாள் ஆங்கில ஆசிரியர் ஆ.தம்பையா ஞாபகார்த்தப் புலமைப்பரிசினை திருமதி ஜெகதீஸ்வரி தம்பையா அவர்கள் வழங்கி உள்ளார்.

## இரட்ணசிங்கம் ஞாபகார்த்த நிதியம்

8) அமரர் திரு.த.இரட்ணசிங்கம் ஞாபகார்த்தப் புலமைப்பரிசினை அவரது மகன் இ.அமிர்தராஜ் அவர்கள் வழங்கியுள்ளார்.

## சூரன் ஞாபகார்த்த நிதியம்

9) சூரன் ஞாபகார்த்தப் புலமைப்பரிசின் நிதியத்தை அவரது குடும்பத்தினர் வழங்கி உள்ளனர்.

## செல்வராஜா ஞாபகார்த்த நிதியம்

10) முன்னாள் ஆசிரியர் அமரர் த.செல்வராஜா அவர்கள் ஞாபகார்த்தமாக மகன் செ.அட்ஜெயலிங்கம் ஆசிரியர் அவர்களால் ஆரம்பப்பிரிவு அனைத்து மாணவர்களுக்குமான பரிசுத்தொகைக்கான நிதி வழங்கப்படுகிறது.

## திரவியசிங்கம் ஞாபகார்த்த நிதியம்

11) அமரர் திரவியசிங்கம் ஞாபகார்த்தமாக அவரது மகன் திரு.தி.வரதராஜன் அவர்களால் கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கப்படுகிறது.

# கல்விச் செயற்பாடுகளும் சாதனைகளும்

தேசிய கல்விக் குறிக்கோளை நிறைவேற்றும் வகையில் பாடசாலையின் தூர நோக்கிற்கு அமைய வேலைத்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. மெல்லக் கற்போருக்கான விசேட செயற்றிட்டங்கள் ஒவ்வொரு ஆசிரியராலும் முன்னெடுக்கப்படுகின்றன. இதனால் அவர்களது அடைவு மட்டம் உயர்த்தப்படுகிறது. அத்துடன் இவ்வருடம் க.பொ.த. சாதாரணப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்காக விசேட வகுப்புக்களும் நடைபெற்று வருகின்றன.

சென்ற வருடம் (2008) நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றிய எமது கல்லூரி கலைப் பிரிவு மாணவர்கள் தமது உயர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுபேறுகள் காரணமாக வடமராட்சி வலயத்தின் ஏனைய முன்னணிப் பாடசாலைகள் பலவற்றை வென்று சிறப்பான வெளிப்பாட்டை குறிப்பாக 100 % சித்தியை அடைந்துள்ளனர். அவர்களில் இருவர் 3 A பெறுபேற்றையும் நால்வர் 2 A பெறுபேற்றையும் பெற்றுள்ளதுடன் 10 க்கும் மேற்பட்டோர் பல்கலைக் கழக அனுமதி பெற்றுள்ளனர். இவர்களது இச் சிறந்த பெறுபேற்றுக்காக உழைத்த ஆசிரியர்களும் இம் மாணவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இக் கல்விச் செயற்பாட்டுச் சாதனைகளுக்கு அப்பால் இவ்வருடம் (2009) நடைபெற்ற தமிழ்த்தின ஆங்கிலதினப் போட்டிகளிலும் எமது கல்லூரி மாணவர்கள் சிறப்பான முறையில் தமது திறமையை வெளிப்படுத்தியுள்ளனர். தமிழ்த்தினப் போட்டியில் இம்முறை கரவெட்டிக் கோட்டத்தில் எமது கல்லூரி மாணவர்கள் பல இடங்களைப் பெற்றதுடன் வடமராட்சி வலயமட்டத் தமிழ்த்தினப் போட்டியில் பிரிவு 4 கவிதைப் போட்டியில் செல்வன் செ.தெய்வீகன் அவர்கள் முதலாம் இடத்தையும் பிரிவு 5 தனி நடனத்தில் செல்வி பா.பிறேமினி அவர்கள் முதலாம் இடத்தையும், இலக்கிய நாடகப் போட்டியில் எமது கல்லூரி இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது. அத்துடன் பிரிவு 5 சிறுகதைப் போட்டியில் செல்வி இ.றிஸ்வினா அவர்கள் இரண்டாம் இடத்தையும், பிரிவு 3 தனிநடனத்தில் செல்வி மெ.ஆரண்யா இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். அத்துடன் வடமராட்சி வலய ஆங்கில தினப்போட்டியிலும் எமது மாணவர்கள் இம்முறை சிறப்பான இடங்களை பெற்றுக்கொண்டுள்ளனர். இதுதவிர ஆரம்பப்பிரிவு கோலப்போட்டி, விளையாட்டுப்போட்டி போன்ற இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் எமது மாணவர்கள் திறமையைக் காட்டி நிற்கின்றனர். இப்போட்டிகளுக்கு மாணவர்களை நெறிப்படுத்தி உதவிய எமத கல்லூரி ஆசிரியர்கள் அனைவருக்கும் ஆகியோருக்கு எனது நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றிகள்

கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளிலும், வளங்களின் அபிவிருத்தியிலும், அனைத்து வகையிலும் உதவிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு இவற்றை மேற்பார்வை செய்து அனைத்து வழிகளிலும் உதவிபுரிந்த வலயக் கல்விப்பணிப்பாளர், பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்விப்பணிப்பாளர். ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோருக்கும் எனது நன்றிகள். ஞாபகார்த்தப் புலமைப் பரிசில்களை வழங்கியோர்க்கும், பாடசாலை வளர்ச்சியில் உதவிய நிறுவனங்களுக்கும் நன்றிகள். மேலும் இன்றைய எமது கல்லூரி பரிசில் நாளில் பிரதமவிருந்தினராய் கலந்து சிறப்பித்த கௌரவ சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் கௌரவ டக்ளஸ்தேவானந்தா அவர்களுக்கும் அவரது அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கும், சிறப்பு விருந்தினர்களாய், விருந்தினர்களாய் கலந்து கொண்ட அனைத்து துறைசார்ந்தவர்களுக்கும் எனது நன்றிகள். மற்றும் இந்நிகழ்வில் கலந்துசிறப்பித்த கல்லூரிச் சமூகத்தினர் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள

இவ்வறிக்கையினை கணனிப்பதிவு செய்துதந்த ஆசிரியர் க.சேதுலிங்கம் அவர்களுக்கும் செவ்வைபார்த்துதவிய ஆசிரியர் திரு வே.நந்தகுமார் அவர்களுக்கும் அச்சில் பதித்துதவிய மதுரன் கிரபிக்ஸ் உரிமையாளர் திரு சு.மகேஸ்வரன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து எனது அறிக்கையை நிறைவு செய்து அமைகின்றேன்.

## கல்விச் சாதனைகள்

2008 க.பொ.த சாதாரண தரப் பரீட்சை
சிறந்த பெறுபேறுபெற்றோர் விபரம்

| மாணவர் பெயர் | A | B | C | S |
|---|---|---|---|---|
| சி.நிருத்திகா | 7 | 1 | 1 | - |
| கு.நிவேதிகா | 4 | 1 | 2 | 2 |
| மு.முரளீதரன் | 3 | 3 | 2 | 2 |
| பா.சந்திரிகா | 2 | 2 | 2 | 2 |
| க.மதுமதி | 2 | 2 | 3 | 2 |
| சி.நிரோஜ் | 2 | 1 | 4 | 1 |
| ஜெ.அச்சுதன் | 2 | - | 3 | 3 |
| ரூ.ரஜீவன் | 2 | - | 3 | 3 |
| பே.உதயராஜ் | 1 | 1 | 6 | 1 |
| எ.துவாரகா | 1 | 1 | 4 | 2 |
| வி.நாகேசன் | 1 | 2 | 1 | 4 |
| சி.சைதீபன் | 1 | 2 | 2 | 3 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த.உயர்தரம் - 2008

சிறந்த பெறுபேறுபெற்று பல்கலைக்கழக அனுமதி பெற்றோர்

| மாணவர் பெயர் | A | B | C | S |
|---|---|---|---|---|
| அ.விமல்ராஜ் | 3 | - | - | - |
| ம.சுரேந்தர் | 3 | - | - | - |
| சி.கௌதமி | 2 | 1 | - | - |
| சி.விஜிதா | 2 | 1 | - | - |
| பா.கோபி | 1 | 2 | - | - |

| மாணவர் பெயர் | A | B | C | S |
|---|---|---|---|---|
| செ.செல்வநந்தனா | 1 | 2 | - | - |
| நா.நாகேந்திரன் | 1 | 2 | - | - |
| இ.சுவரேகா | 2 | 1 | - | - |
| செ.சுவாதிகா | 1 | 2 | - | - |
| ஆ.கோவர்த்தனன் | 2 | - | 1 | - |
| சீ.தாரகன்(விசேட அனுமதி) | - | - | 2 | 1 |

தரம் 5 புலமைப்பரிசில் பரிட்சையில் சித்தியடைந்தோர் 2008

| மாணவர் பெயர் | புள்ளிகள் |
|---|---|
| ம.மதுமிதன் | 136 |
| இ.ஜனுசன் | 121 |
| தி.சர்மினா | 127 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வகுப்பு ரீதியான பரிசில்கள் பெறுவோர் விபரம் 2008

| மாணவர் பெயர் | பாடங்கள் | மாணவர் பெயர் | பாடங்கள் |
|---|---|---|---|
| **தரம் - 1** | | **தரம் - 3A** | |
| சோ.கிருத்திக்ரோசன் | தமிழ் கணிதம் | ஆ.ஆதித்தியா | தமிழ், சைவசமயம், ஆங்கிலம், சுற்றாடல் |
| க.பிரியதர்ஷன் | சைவசமயம் | | |
| க.டானியல் | கிறிஸ்தவம் | | |
| கி.பகீரதி | சுற்றாடல் | யோ.நிவேதிதா | கணிதம் |
| **தரம் - 2** | | **தரம் - 3B** | |
| ர.மேனஜா | தமிழ், கணிதம் | சி.திரன்ஜா | தமிழ், ஆங்கிலம், கணிதம்,சுற்றாடல், சமயம் |
| ஞா.ஆரணி | சைவசமயம் | | |
| பா.அபிராஜிதன் | சுற்றாடல் | | |
| உ.நிரு'ா | கிறிஸ்தவம் | நே.மதுசன் | கிறிஸ்தவம் |
| **தரம் - 4 A** | | | |
| ஞா.கார்த்திகேயன் | கணிதம்,ஆங்கிலம், சுற்றாடல் | | |
| ஜெ.சூரியகாந் | தமிழ் | | |
| கௌ.விஷ்வா | சைவசமயம் | | |
| உ.நிரோசன் | கிறிஸ்தவம் | | |
| சு.பிரதீபன் | அழகியல் | | |
| **தரம் - 4 B** | | **தரம் - 8 A** | |
| த.தனுஜா | கணிதம், ஆங்கிலம் | யோ.ஸ்ரீநங்கை | தமிழ், கணிதம் ஆங்கிலம், விஞ்ஞானம் புவியியல், சுகாதாரம் வரலாறு, சங்கீதம் சமயம், குடியியல் |
| தி.நிஹாசன் | தமிழ் | | |
| நா.பிரசாந்தினி | சுற்றாடல் | | |
| பி.ரிஷிகேசன் | அழகியல் | | |
| ஜெ.மதுமிதா | சைவசமயம் | | |
| தே.மேரிஅன்ரனீகா | கிறிஸ்தவம் | பி.அனுராகன் | சித்திரம் |
| | | மெ.ஆரண்யா | நடனம் |
| | | சி.சுகன்யா | வா.தேர்ச்சி |
| | | க.மதுஷன் | செ.முறைத் தொ.நு |
| | | சி.சாலோமி | கிறிஸ்தவம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தரம் - 5

| | |
|---|---|
| ம.மதுமிதன் | தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம். சைவசமயம்,அழகியல் |
| ச.அஜித்குமார் | கிறிஸ்தவம் |

### தரம் - 6 A

| | |
|---|---|
| யோ.நிருஜா | தமிழ், விஞ்ஞானம், வரலாறு குடியியல், புவியியல் |
| சா.உதயசாந் | ஆங்கிலம், கணிதம், சித்திரம், செயன் மு.தொ.நு |
| ஜெ.மாதங்கி | சைவசமயம்,சுகாதாரம் சங்கீதம் |

### தரம் - 6 B

| | |
|---|---|
| த.கோமகன் | தமிழ், சமயம், விஞ்ஞானம்,கணிதம் புவியியல்,வரலாறு குடியியல், சித்திரம் |
| சி.றம்மியா | நடனம், ஆங்கிலம் சுகாதாரம் |
| கே.லக்சியா | சங்கீதம் |
| க.டென்சன் | கிறிஸ்தவம் |

### தரம் - 7 A

| | |
|---|---|
| சி.வர்ணன் | சைவசமயம் ஆங்கிலம்,வரலாறு புவியியல், கணிதம் விஞ்ஞானம், சங்கீதம் |
| க.ரங்கா | தமிழ், சுகாதாரம் குடியியல் |
| து.விஷ்ணுப்பிரியா | நடனம் |
| ஜெ.சகிஷணன் | சித்திரம் |

### தரம் - 8 B

| | |
|---|---|
| ஜெ.இளஞ்செழியன் | தமிழ், கணிதம் ஆங்கிலம், விஞ்ஞானம் புவியியல், சுகாதாரம் வரலாறு சித்திரம் |
| ம.மயூரன் | சமயம், குடியியல் |
| கு.நிரோஜினி | வா.தேர்ச்சி |
| தி.சதுர்த்திகா | சங்கீதம், செ.மு.தொ.நு |

### தரம் - 8 C

| | |
|---|---|
| சி.மேனுஜா | கணிதம், சைவசமயம் வரலாறு, புவியியல் குடியியல்,சுகாதாரம் சங்கீதம் |
| கி.கிருஷாந்தி | ஆங்கிலம், தமிழ் விஞ்ஞானம் |
| இ.திவிஸன் | சித்திரம் |

### தரம் - 9 A

| | |
|---|---|
| சி.சிந்துஜா | தமிழ், சமயம் ஆங்கிலம், கணிதம் விஞ்ஞானம், வரலாறு புவியியல், குடியியல |
| த.நிதர்சனா | நடனம் |
| ஸ்ரீதர்.ஸ்ரீராம் | சித்திரம் |
| ம.சுவர்ணன் | செ.மு.தொழிநுட்பம் |

### தரம் - 9 B

| | |
|---|---|
| கு.லகீதனா | சைவசமயம்,தமிழ் கணிதம்,விஞ்ஞானம் வரலாறு, புவியியல் |
| அ.நித்தியாஞ்சலி | ஆங்கிலம், நடனம் குடியியல் |
| சி.கானவன் | சித்திரம் |
| வி.திலக்ஷன் | சங்கீதம் |
| ஜெ.ஜெயசீலன் | கிறிஸ்தவம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரம் - 7 B**

| | |
|---|---|
| பா.திருபரன் | தமிழ், வரலாறு, கணிதம், புவியியல் குடியியல்,சுகாதாரம் |
| தே.ஜரிந்த்ர்மினி | ஆங்கிலம், நடனம், புவியியல் |
| ம.நிவேதினி | விஞ்ஞானம்,செ.மு.தொ.நு |
| க.நிதுஷா | சைவசமயம் |
| கி.சங்கீர்த்தனன் | சித்திரம் |
| ஜெ.சுஜீவா | சங்கீதம் |

**தரம் - 10 A**

| | |
|---|---|
| வி.பிறேமிலா | தமிழ், சமயம் கணிதம், ஆங்கிலம் விஞ்ஞானம், வர்த்தகம் நடனம், த.தொ.நு |
| ச.சங்கர் | வரலாறு, நா.அர |
| தி.ரவிராஜ் | புவியியல் |
| த.திவ்யா | சங்கீதம் |
| கெ.கிருஷாந் | சித்திரம் |
| இ.நாளாஜினி | மனைப்பொருளியல் |
| இ.நிலான் | வடிவமைப்பும் தொ.நு |
| லோ.ஜனனி | சுகாதாரம் |

**தரம் - 10 B**

| | |
|---|---|
| சா.பியன்வதா | தமிழ், சமயம் கணிதம், வரலாறு விஞ்ஞானம், புவியியல் நா.அரங்கியல், சுகாதாரம் |
| க.சுபாஸ்கரன் | சித்திரம், வ.தொ.நு |
| தி.ஜன்சா | ம.பொருளில், கத்தோலிக் |
| கி.ஈசாக் | கிறிஸ்தவம் |

**தரம் - 11 A**

| | |
|---|---|
| சி.நிருத்திகா | சமயம், தமிழ் கணிதம், ஆங்கிலம் வரலாறு, புவியியல் நா.அரங்கியல்,த.தொ.நு |
| பே.உதயராஜ் | ஆங்கிலம் |
| மு.முரளீதரன் | விஞ்ஞானம் |
| சி.நிரோஜ் | சித்திரம் |
| கு.நிவேதிகா | நடனம், சுகாதாரம் |
| யோ.கானகன் | வடிவமைப்பு தொ.நு |
| ந.நிரோஜா | மனைப்பொருளியல் |
| யோ.அஞ்சலா | சங்கீதம் |

**தரம் - 11 B**

| | |
|---|---|
| செ.பிரசாந்தினி | தமிழ், சமயம் ஆங்கிலம், வரலாறு விஞ்ஞானம், ம.பொரு |
| செ.சிந்துசா | கணிதம், சித்திரம் சுகாதாரம் |
| த.பிரியதர்சினி | புவியியல், நா.அரங் |

**தரம் - 11 C**

| | |
|---|---|
| ம.மான்விழி | தமிழ்,கணிதம், சமயம் விஞ்ஞானம், நா.அரங் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தரம் - 12 | | தரம் - 13 | |
|---|---|---|---|
| இ.றிஸ்வினா | அளவையியல் | த.பிரதீபன் | தமிழ் |
| இ.சுமித்தா | நாடகமும் அரங்கியலும் | ந.சகிந்தன் | அளவையியல் |
| ஜெ.ஜெனித்தா | தமிழ் | யோ.நிரோஜா | நா.அரங்கி |
| ர.ராஜாராம் | சித்திரம் | | |
| தே.மாருதி | இந்துநாகரிகம் | | |
| சே.குவேனி | நடனம் | | |
| சீ.சுதர்சன் | அரசியல் | | |
| றெஜினா | சங்கீதம் | | |

## சிறப்புப் பரிசில்கள்

**கல்வித் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட போட்டிகள்**

| | | |
|---|---|---|
| ஆரம்பப் பிரிவு கோலப்போட்டி | - சோ.தாக்ஷாயினி | கோட்டமட்டம் 2ம் இடம்<br>வலயமட்டம் 3ம் இடம் |
| | - பா.அபிராஜிதன் | கோட்டமட்டம் 3ம் இடம் |

**தமிழ்த் தினப் போட்டி - 2009**

| | | |
|---|---|---|
| இடைநிலைப் பிரிவு நடனம் | - மெ.ஆராண்யா | வலயமட்டம் 2ம் இடம் |
| மேற்பிரிவு நடனம் | - பா.பிறேமினி | வலயமட்டம் 1ம் இடம் |
| மேற்பிரிவு சிறுகதையாக்கம் | - இ.றிஸ்வினா | வலயமட்டம் 2ம் இடம் |
| மேற்பிரிவு கவிதையாக்கம் | - செ.தெய்வீகன் | வலயமட்டம் 1ம் இடம்<br>மாவட்டமட்டம் 2ம் இடம் |
| இலக்கிய நாடகம் | - குழு | வலயமட்டம் 2ம் இடம் |

**விளையாட்டுப் போட்டி 2009**

| | | |
|---|---|---|
| 11 வயதின் கீழ் 75 m ஓட்டம் | - இ.நளினா | மாவட்டமட்டம் 2ம் இடம் |

**முதியோர்,மாற்று ஆற்றலுடையோர் தினப்போட்டி -2009**

| | | |
|---|---|---|
| கீழ்ப்பிரிவு கவிதை | - ஜெ.சகிக்ஷணன் | கோட்டமட்டம் 3ம் இடம் |
| மேற்பிரிவு கவிதை | - இ.நிரோஜினி | கோட்டமட்டம் 1ம் இடம் |
| உயர்பிரிவு பேச்சு | - ஞா.விஜிதா | கோட்டமட்டம் 2ம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## English Day

| Competition | Divisional level | | |
|---|---|---|---|
| Grade 6 A | | M.Mathumithan | 1st Place |

**Recitation**

| | | |
|---|---|---|
| Grade 7A | J.Mathanki | 2nd Place |
| Grade 10A | K.Sangeetha | 1st Place |
| Grade 10A | G.Pratheeka | 2nd Place |

**Creative Writing**

| | | |
|---|---|---|
| Grade 8A | S.Ramki | 3rd Place |
| Grade 11A | V.Premila | 1st Place |

**Copy Writing**

| | | |
|---|---|---|
| Grade 7 | S.Rammiya | 2nd Place |
| Grade 9A | S.Svuganja | 2nd Place |
| Zonal level 3rd Place | | |
| Grade 10A | S.Arunraj | 3rd Place |

### புலமைப் பரிசில்கள்

அமரர் த.தணிகாசலம் ஞாபகார்த்தம்
வழங்குனர் - ந.திலீபன் அமெரிக்கா
தரம் 5 புலமைப் பரிசில்
1) ம.மதுமிதன்
2) இ.ஜனுசன்
3) தி.சர்மினா

கா.பொ.த.சாதாரண தரம்
அமரர் ஆ.பிள்ளையினார் ஞாபகார்த்தம்
வழங்குனர் - பி.கிருஷ்ணானந்தன் கொற்றாவத்தை
1) சி.நிருத்திகா

அமரர் சூ.ஏகாம்பரம் ஞாபகார்த்தம்
வழங்குனர் - குடும்பத்தனர்
1) பா.சந்திரிக்கா
2) க.மதுமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமரர் சூ.சிவபாக்கியம் ஞாபகார்த்தம்**
வழங்குனர் - குடும்பத்தினர்
1) மு.முரளீதரன்
2) சி.நிரோஜ்

**அமரர் J.S. கிறிஸ்ததாஸ் ஞாபகார்த்தம்**
வழங்குனர் - திருமதி நே.கிறிஸ்ததாஸ் அல்வாய்
1) கு.நிவேதிகா
2) எ.துவாரகா

**அமரர் தங்க ரமணன் ஞாபகார்த்தம்**
வழங்குனர் - திரு சு.தங்கராசா வதிரி
1) பே.உதயராஜ்
2) ரூ.ரஜீவன்

**அமரர் க.வேலுப்பிள்ளை ஞாபகார்த்தம்**
வழங்குனர் - வே.சிவராஜலிங்கம் அல்வாய் வடமேற்கு
1) ஜெ.அச்சுதன்

**க.பொ.த.உயர்தரம் 2008**
**அமரர் பா.பரஞ்சோதி ஞாபகார்த்தம்**
வழங்குனர் - திரு.ந.பாஸ்கரன் நெல்லியடி
1) விமல்ராஜ்
2) ம.சுரேந்தர்

**அமரர் த.இரத்தினசிங்கம் ஞாபகார்த்தம்**
வழங்குனர் - இ.அமிர்தராஜ் வதிரி
1) விமல்ராஜ்
2) ம.சுரேந்தர்

**அமரர் வ.பரஞ்சோதி ஞாபகார்த்தம்**
வழங்குனர் - திரு, திருமதி ஜோதீஸ்வரன் வாசுகி வதிரி
1) கௌதமி

**அமரர் சைவப் பெரியார் சூரன் ஞாபகார்த்தம்**
வழங்குனர் - குடும்பத்தினர்
1) சி.விஜிதா
2) செ.செல்வநந்தனா
3) இ.சுபரேகா
4) செ.சுவாதிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் விஜயரட்ணம் ஞாபகார்த்தம்
வழங்குனர் - வி.மதனராஜன் வதிரி
1) பா.கோபி

அமரர் சி.திரவியம் ஞாபகார்த்தம்
வழங்குனர் - குடுப்பத்தினர்
1) நா.நாகேந்திரன்
2) ஆ.கோவர்த்தனன்

அமரர் த.தம்பிராசா ஞாபகார்த்தம்
வழங்குனர் திருமதி த.தேவானந்
1) சீ.தாரகன்

அமரர் [illegible]
வழங்குனர் [illegible] வதிரி
1, [illegible]
2, [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக்கீதம்

வாழிய வாழிய தேவரையாளி
வாழ்க நம் இந்துக் கல்லூரி

வற்றாத கல்விபயில் ஆலயமான
வான்புகழ் மாதா வாழ்க
அறிவியற் கலையிசை ஒவியம் தொழில்கள்
அறியநற் பண்பருள் தாயே

மெய்ப்பொருள் காண்பது அறிவே.
மேன்மைகொள் சைவம் உயிரே
மிகுநலம் பல அருள்வாயே
வாழிய மங்கலமான கல்லூரி

வாழ்த்தி வணங்குகின்றோமே
அறிவே திருவே அருளே
அருமறை தரு நிதியே
அனுதினம் வாழ்த்துகின்றோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org